**வட மாகாண சபை**

**2026 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்**

வட மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உப அலுவலகங்களுக்கு 2026 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு **உள்ளூர் நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களாக** பதிவு செய்ய விரும்பும் **யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **2025 டிசம்பர் மாதம் 01 ஆம்** திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்படிவங்கள் மற்றும் விபரங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் தரவிறக்கம் செய்து அல்லது **மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்**. எனும் முகவரியில் இயங்குகின்ற **மாகாணத்திறைசேரி** அலுவலகத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிலுள்ள நிதிக்கிளைகளிலும் பெற்றுக்கொள்ளமுடியும். மேலதிக விபரங்களுக்கு கணக்காளர், மாகாணத் திறைசேரி, வடமாகாணம். அவர்களுடன் தொலைபேசி இல. 0212213540 மூலம் தொடர்பு கொள்ளவும்.

பிரதம செயலாளர்,
வட மாகாண சபை, தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்
மாகாணசபை வளாகம்,
A9 வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.

# வட மாகாண சபை

## 2026 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வட மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உப அலுவலகங்களுக்கு 2026 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு **உள்ளூர் நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களாக** பதிவு செய்ய விரும்பும் **யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி இல | வேலைகள் (W), கட்டடப் பொருட்கள் (B), ஏனைய பொருட்கள் (G) மற்றும் சேவைகள் (S) விபரம் |
|---|---|
| W-01 | கட்டட நிர்மாணம் மற்றும் திருத்தமும் பராமரிப்பும் |
| B-01 | கட்டுமான வேலைக்கான மூலப் பொருட்கள் - General Material (Bricks, Cement Blocks, Clay Fire, Lime Boiled, Lime Sleeked, Metals, Red Earth/Gravel, Rubble, Sand River/ Sea / Moyakaata, Gravelly Earth, Fertilizer, Supply of Paints) |
| B-02 | சீமெந்து வகைகள் |
| B-03 | தள / கூரைப் பொருட்கள் - Flooring / Roofing Materials |
| B-04 | Sanitary Fitting and Accessories |
| B-05 | கட்டுமான வேலைகளுக்கான மரங்கள் - Timber for Construction work |
| B-06 | Concrete and Pre-cast Concrete Products |
| B-07 | Plates, Rods, Pipes, Bars and Tubing Metalic |
| B-08 | Hardware General Items |
| B-09 | அலுமினிய உற்பத்திகள் - Aluminum Products |
| B-10 | நீர் விநியோக உபகரணங்கள் - Plumbing Items |
| B-11 | Storage Tanks |
| B-12 | Wire Barbed / Chain Links Fencing / Gabion Boxes |
| B-13 | Erosion Control Products |
| B-14 | Quarry Dust / Chips |
| G-01 | அலுவலக தளபாடங்கள் |
| G-02 | அலுவலக உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், கணினிகளும் உதிரிப்பாகங்களும் மற்றும் CCTV உபகரணங்கள் |
| G-03 | காகிதாதிகள், எழுதுகருவிகள், பாடசாலை உபகரணங்கள் |
| G-04 | ரோணர்கள் (Toners), ரிபன்கள் (Ribbons) |
| G-05 | சுத்திகரிப்பு பொருட்களும் உபகரணங்களும் |
| G-06 | புத்தகங்களும், பருவ வெளியீடுகளும் |
| G-07 | மின் இணைப்புப் பொருட்கள், மின்சார உபகரணங்கள் (Electrical Fitting & Electrical equipment) |

| | |
|---|---|
| G-08 | பொது உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் சமூகநலன் பொருட்கள் |
| G-09 | இரும்புப் பொருள் உபகரணங்கள் |
| G-10 | ஒலி ஒளி உபகரணங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் |
| G-11 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-12 | இசைக் கருவிகள் |
| G-13 | உலர் உணவு வழங்கல் |
| G-14 | சமைத்த உணவு, குளிர்பானம், சிற்றுண்டி, பேக்கரி உணவுப் பொருட்கள் வழங்கல் |
| G-15 | மரக்கறிகள் வழங்கல் |
| G-16 | பழவகைகள் வழங்கல் |
| G-17 | இறைச்சி, மீன், முட்டை வழங்கல் |
| G-18 | பால் வழங்கல் |
| G-19 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| G-20 | துணிகள் மற்றும் உடுபுடவைகள் வழங்கல் |
| G-21 | வைத்தியசாலை வாயு வழங்கல் (Medical gas) |
| G-22 | வைத்தியசாலைக்கான மருந்து வகைகள் வழங்கல் |
| G-23 | வைத்திய ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் வழங்கல் |
| G-24 | மருத்துவ உபகரணங்கள் வழங்கல் |
| G-25 | ஆயுர்வேத / சுதேச மருந்துகள் வழங்கல் |
| G-26 | ஆயுர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப் பொருட்களும் வழங்கல் |
| G-27 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருட்கள் வழங்கல் |
| G-28 | கால்நடைகளுக்கான மருந்துகள் வழங்கல் |
| G-29 | கால்நடைகளுக்கான உபகரணங்கள் மற்றும் கருவிகள் வழங்கல் |
| G-30 | விவசாய இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அவை தொடர்பான கருவிகள் |
| G-31 | விவசாய பொருட்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் |
| G-32 | விவசாய விதைகள், நடுகைப் பொருட்கள் |
| G-33 | மீன்பிடி தொடர்பான பொருட்கள் |
| G-34 | கைத்தொழில் மூலப்பொருட்கள் (Handloom & Power loom Yarn items, Patick Dye, Yarn Dye, Chemical Items, Textile accessories & etc.) |
| G-35 | அலங்கார அழகுசாதனப் பொருட்கள் வழங்கல் |
| G-36 | பாதணிகள் வழங்கல் |
| G-37 | வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள், பற்றறிகள் மற்றும் ரயர் ரியூப் வழங்கல் |
| G-38 | தையல் இயந்திரங்கள், Handloom & Power loom Machine, Jewelry making machine |
| G-39 | Drip Irrigation & Sprinkler Irrigation |

| | |
|---|---|
| S-01 | அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள் தயாரித்தல் மற்றும் அலுவலக அட்டை தயாரித்தல் |
| S -02 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| S -03 | அலுவலக உபரணங்கள், கணினிகள், பிறின்டர்கள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் |
| S-04 | மின் உபகரணங்கள், மின் இணைப்புப் பொருட்கள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் |
| S-05 | கணணி மென்பொருள் தயாரித்து வழங்கல் |
| S-06 | உள்ளகத் தொலைபேசி (Intercom) திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| S-07 | Solar திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| S-08 | தீயணைப்புக்கருவிகள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| S-09 | பாதுகாப்பு சேவைகள் வழங்குதல் |
| S-10 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல் |
| S-11 | ஒளி மற்றும் ஒலிப்பதிவு சேவைகள் வழங்கல் (Video and Audio Recording, Sound & Light service) |
| S-12 | புகைப்படப்பிடிப்பு சேவைகள் |
| S-13 | மருத்துவ உபகரணங்கள் பராமரிப்பும் பழுதுபார்த்தலும் |
| S-14 | தையல் இயந்திரம் திருத்தமும் பராமரித்தலும் |
| S-15 | விவசாய உபகரணங்கள் தயாரித்தல், வடிவமைத்தல் மற்றும் திருத்தம் செய்தல் |
| S-16 | வாகனங்களுக்கான இயந்திர திருத்தம் |
| S-17 | வாகனங்களுக்கான Tinkering, Painting மற்றும் ஏனைய வெளிவாரியான திருத்தங்கள் |
| S-18 | வாகனங்களுக்கான A/C திருத்தம் |
| S-19 | வாகனங்களுக்கான Wiring & Electrical Works |
| S-20 | வாகனம் பராமரித்தல் மற்றும் வாகன சுத்திகரிப்பு சேவைகள் (Vehicle Maintenance and Service) |
| S-21 | வாகனங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்கல் |
| S-22 | வாகனங்கள் மற்றும் தளபாடங்களுக்கான குசன் வேலைகள், தளவிரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள் |
| S-23 | குழாய் பொருத்துனர் சேவையும் நீர் வழங்கல் சேவையும் |
| S-24 | நிலமட்டப்படுத்தல் சேவைகள் |
| S-25 | அலுமினியம் மற்றும் இரும்பு பொருத்துதல் வேலைகள் |
| S-26 | Dome tent & Event management service |

## 01. பொதுவான நிபந்தனைகளும் அறிவுறுத்தல்களும்

1. இவ் நிர்மாணதாரர்களையும் வழங்குநர்களையும் பதிவு செய்தல் 2026 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.
2. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. வடமாகாணத்தில் குறைந்தது ஓர் இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் ஒரு கிளை (Branch) / ஒரு காட்சி அறை / முகவர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் (Authorized Dealer) ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.
4. நிர்மாணதாரர்கள் / வழங்குநர்கள் குறிப்பிட்ட வேலைகள் / பொருட்கள் / சேவைகளை பதிவு செய்வதற்கு தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
5. விலை மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட வேலைகள் / பொருட்கள் / சேவைகளை உரிய காலத்திற்குள் மாதிரிக்கு அமைவாக வழங்காத பதிவு செய்த நிர்மாணதாரர்கள் / வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித அறிவித்தலுமின்றி ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளார்.
7. வேலைகள் / பொருட்கள் / சேவைகளை விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம் அல்லது மாவட்டங்களை நிர்மாணதாரர்கள் / வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களுக்கு **கணக்காளர், மாகாணத்திறைசேரி, வட மாகாணம்** அவர்களுடன் **தொலைபேசி இல 0212213540** மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.

## 02. நிர்மாணதாரர்களை பதிவு செய்வதற்குரிய மேலதிக தகைமைகள்

1. CIDA நிறுவனத்தில் நிர்மாணதாரர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள C4 தரத்திலிருந்து C9 தரத்திலுடையவர்கள் மற்றும் பதிவு செய்து கொண்டுள்ள சங்கங்கள் நிர்மாண வேலைகளின் பொருட்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தகுதியுடையோராவர்.
2. CIDA இல் பதிவு செய்யப்பட்ட நிர்மாணத் தன்மை அல்லது அதனுடன் தொடர்புள்ள சேவைகளுக்கு மட்டுமே நிர்மாணதாரர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியும்.
3. தகைமைகளையும், உடமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 03. வழங்குநர்களை பதிவு செய்வதற்குரிய மேலதிக நிபந்தனைகள்

1. வியாபார பதிவுச்சான்றிதழில் வியாபாரத்தின் தன்மையாக குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
2. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான முற்பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது.
3. உள்ளூர் பெறுகைகள் பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும், விலை குறிப்பிடல் முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்கள் சேவைகளுக்காக இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கான உரிமையும் உண்டு.
4. வாகன பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புக்கென பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும்

பயிற்சி பெற்ற வேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்). தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.

## 04. விண்ணப்பப்படிவம் பதிவு செய்தலும் கட்டண விபரமும்

1. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு (வழங்குநர்களுக்கானது - இணைப்பு 01, நிர்மாணதாரர்களுக்கானது - இணைப்பு 02) உறுதிப்படுத்தப்பட்ட **வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி, மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபை வரிப்பதிவுச் சான்றிதழின் பிரதி, நிர்மாணதாரர்கள் மேலதிகமாக CIDA புத்தகத்தின் முதற்பக்கம், பதிவு பக்க பிரதியுடன் மீளளிக்கப்படாத வைப்புப் பணச்சிட்டையினையும் இணைத்து** 2025 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக **"பிரதிப் பிரதம செயலாளர் (நிதி), மாகாணத்திறைசேரி, மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2026 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்தல்"** என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தினை **"பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, மாகாணத் திறைசேரி, வடமாகாணம் எனும் பெயரில் உள்ள 85298114 எனும் இலங்கை வங்கி, கைதடி கணக்கிலக்கத்தில்"** பணமாக வைப்பில் இடவேண்டும். வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச்சிட்டையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. **பொருட்கள் சேவைகள் மற்றும் வேலைகளுக்கான மீளளிக்கப்படாத பண வைப்பு விபரம்.**

| இல | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| 01 | பொருட்கள், சேவைகள் (ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக) | 500.00 |
| 02 | CIDA நிறுவனத்தில் பதிவு செய்யாத சங்கங்கள் | 500.00 |
| 03 | CIDA - C9 | 500.00 |
| 04 | CIDA – C8 | 1,000.00 |
| 05 | CIDA – C7 | 1,500.00 |
| 06 | CIDA - C6 | 2,000.00 |
| 07 | CIDA – C5, C4 | 2,500.00 |

தனுஜா முருகேசன்,
பிரதம செயலாளர்,
வட மாகாண சபை.

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

*இணைப்பு 01*

| **Office Use Only** | |
|---|---|

2026 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

வட மாகாண சபை

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :-……………………………………………………………..

2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-……………………………………………………………..........

3. வியாபார நிறுவனத்தின் வடமாகாணத்திற்குரிய கிளை/ காட்சி அறை/ முகவர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் முகவரி.-…………………………………………………………………......

……………………………………………………………………………………………………..

4. தொலைபேசி நிலையானது (Land) :-……………………………………………………..

கைத்தொலைபேசி (Mobile) :-……………………………………………………..

5. தொலைநகல் (Fax) இலக்கம் :-……………………………………………………………

6. மின்னஞ்சல் முகவரி :-……………………………………………………………

7. வியாபார பதிவு இலக்கம் :-…………………………………………………………....

*(வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)*

8. வியாபாரத்தின் தன்மை :-……………………………………………………………

9. முகவராக இருப்பின் அவை தொடர்பான விபரங்கள் (ஆவணங்களின் பிரதி இணைத்தல்):-

……………………………………………………………………………………………………..

10. வியாபார அனுமதிப்பத்திரத்தினை வழங்கிய நிறுவனத்தின் பெயர் (மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபை) :…………………………………………………………………………..

*(வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)*

11. வற் (VAT) வரி பதிவு இலக்கம் (இருப்பின்):- ………………………………………………..

*(வற் (VAT) வரி பதிவு பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)*

12. பதிவு செய்யப்படவேண்டிய பொருட்கள் / சேவைகளின் தொகுதி :-

| தொகுதி இல | பொருட்கள் / சேவைகள் விபரம் |
|---|---|
| | |
| | |
| | |

13. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள்:-..........................................................

..............................................................................................................................

14. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி (Credit Period) :-.....................................

..............................................................................................................................

15. வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-

(விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம் / மாவட்டங்களினை"✓" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவுசெய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால்/ எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும், வட மாகாண சபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறேன். பதிவுக் கட்டணம் ரூபா ................ இனை 2025/......./....... ஆம் திகதி ......................... இலங்கை வங்கிக் கிளையில் வைப்புச் செய்து அதற்கான பணவைப்புச்சிட்டை இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

| ........................................ | ..................................... | ......................... |
|---|---|---|
| விண்ணப்பதாரியின் ஒப்பம் | விண்ணப்பதாரியின் பெயர் | திகதி |

*இணைப்பு 02*

| **Office Use Only** | |
|---|---|

2026 ஆம் ஆண்டுக்கான நிர்மாணதாரர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

வட மாகாண சபை

1. நிறுவனம் சார் தகவல்கள்

1.1. ஒப்பந்தக்காரரின் பதிவுப் பெயர் :...........................................................................

1.2. தொலைபேசி நிலையானது (Land) :-...........................................................................

கைத்தொலைபேசி (Mobile) :-...........................................................................

1.3. தொலைநகல் (Fax) இலக்கம் :-...........................................................................

1.4. மின்னஞ்சல் முகவரி :-...........................................................................

1.5. வியாபார பதிவு இலக்கம் :...........................................................................

*(வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)*

1.6. வியாபாரத்தின் தன்மை :...........................................................................

1.7. பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி...........................................................................

...........................................................................

1.8. வியாபார நிறுவனத்தின் வடமாகாணத்திற்கு உட்பட்ட முகவரி : ...................................

...........................................................................

1.9. CIDA பதிவு இலக்கம் ...........................................................................

2. ஒப்பந்தக்காரர் ICTAD இல் ஏற்கனவே பதிவு செய்திருப்பாராயின் விசேட நிபுணத்துவம் சார் துறையினையும் தரத்தினையும் குறிப்பிடவும்.

| | | | |
|---|---|---|---|
| கட்டிடம் | ☐ | தரம் | ☐ |
| பாலம் | ☐ | தரம் | ☐ |
| நீர்ப்பாசனம் | ☐ | தரம் | ☐ |
| பெருந்தெருக்கள் | ☐ | தரம் | ☐ |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு | ☐ | தரம் | ☐ |

3. மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயரும் பதவியும்

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

4. நீங்கள் தவறிய ஒப்பந்தகாரராக (Default Contractor) அறிவிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை)

5. வேலைகள் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-

(விண்ணப்பதாரி வேலைகள் செய்யக்கூடிய மாவட்டம் / மாவட்டங்களினை "✓" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவுசெய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

6. பொது வரை, பொறுப்புடைமை கம்பனி அல்லது நியதிச் சட்ட சபையாக இருப்பின்

பதிவு இல :…………………………………………………

பதிவு செய்த திகதி :…………………………………………………

வெளியிட்ட குறித்துரைக்கப்பட்ட மூலதனம் :…………………………………………………

என்னால்/ ஏங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும், வட மாகாண சபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வேலைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறேன். பதிவுக் கட்டணம் ரூபா …………….. இனை 2025/……./……. ஆம் திகதி …………………….. இலங்கை வங்கிக் கிளையில் வைப்புச் செய்து அதற்கான பணவைப்புச்சிட்டை இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ……………………………………… | ………………………………… | …………………… |
| விண்ணப்பதாரியின் ஒப்பம் | விண்ணப்பதாரியின் பெயர் | திகதி |